www.padippakam.com

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
## (PLOT)

# நமது மறுப்பறிக்கை

### தமிழ் பேசும் இனமே!

''தலைமை தாங்கிய உமாமகேசுவரன், துப்பாக்கி கையேந்தும் விடுதலைப்புலிகள்'' என்ற தலைப்பில் வந்த துண்டுப்பிரசுரம் ஒன்றை வாசித்திருப்பாயே! அதில் உண்ணாவிரதம் இருந்த அறப்போராளிகளை எமது அமைப்பைச் சார்ந்தவர்கள்தான் கடத்திச்சென்றதாக சொல்லப்பட்டிருந்தது. பார்த்தவுடனேயே அது பொய்யானது என்றும், யாரோ சதிகாரர்களின் வேலை என்றும் நீ புரிந்துகொண்டிருப்பாய்! ஆனாலும் அதிகாரபூர்வமாக அதை மறுக்கவேண்டியது எமதுகடமை.

அறவழிப்போராளிகள் ஆயுதமுனையில், பலாத்காரமாக கடத்தப்பட்டனர் என்பதை அன்று இரவு கேள்விப்பட்டவுடனேயே இரவோடிரவாக அதைக் கண்டித்து சுவரொட்டிகளை நாம் ஒட்டியிருந்தோம். அவரவர் தம் சக்திக்கேற்ப அரசுக்கு எதிரான போராட்டத்தையும் நாம் வரவேற்கின்றோம். ஆனால் அதே வேளை இறுதியான தீர்வு மக்களுடைய ஆயுதம் தாங்கிய ஐக்கியப்பட்ட புரட்சியே என்பதை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம்.

நமது அமைப்பின் வளர்ச்சியைக் கண்டு ஜீரணிக்முடியாத பல்வேறு எதிர்ப்புரட்சிகர சக்திகளும், பிற்போக்காளர்களும் எம்மீது பல்வேறு அவதூறுகளை அள்ளிவீசியுள்ளனர். இவற்றிற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது என்பதும் உனக்குத் தெரியும், இவ்வகைப் பிற்போக்கு சக்திகள் எம்மை கொள்கை, கொள்கைவழிச் செயற்பாடுகள் என்ற அடிப்படையில் என்றும் எம்மை விமர்சனம் செய்தது கிடையாது. அந்தத் துணிவும், நேர்மையும் அவர்களுக்குக் கிடையாது.

இவ்வரிசையில் மேலே குறிப்பிட்ட துண்டுப்பிரசுரமும் ஒரு சதிமுயற்சியே. என்னதான் தலைகீழாய் நின்றாலும் மக்களுடன் நெருக்கமாக, நம்பிக்கையாக இணைந்து வேலை செய்யும் எம்மைப்பற்றி மக்களிடம் இவர்களால் எப்படி அவதூறு பரப்பமுடியும்? ஏற்கனவே பிற்போக்கு சக்திகள் பலவற்றால் பரப்பப்பட்ட கட்டுக்கதைகளால் ஏற்பட்ட உண்மைவிளைவுதான் என்ன? மக்கள் மத்தியில் நமது செல்வாக்கு உயர்ந்ததுதான் என்பதையாவது இந்த பிரகிருதிகள் புரிந்துகொள்ளவில்லையே!

மேற்படி துண்டுப்பிரசுரத்தில் காணப்படும் சிறுபிள்ளைத்தனமான வாசகங்களும், போராளி குட்டிமணி பற்றிய பிரத்தாபங்களும், தொலைபேசி இலக்கமும், நமது அமைப்பின் செயலதிபரின் பெயர் குறிப்பிட்டமையும், வேண்டுமென்றே செய்யப்பட்ட சதிச்செயல் என்பதும், இந்த அவதூறு பரப்பும் முயற்சியால் நமது வளர்ச்சி ஒருபடி முன்செல்லும் என்பதும் திட்டவட்டமானது.

இந்தச் செயலைப்புரிந்த வேடதாரிகள் பிடிக்கப்பட்டு அம்பலமாக்கப்பட்டு நடுத்தெருவில் மக்கள் முன்னிலையில் முறையான தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள் என்று கடுமையாக எச்சரிக்கை விடுக்கின்றோம்.

**தொடர்ந்தும் தமிழ்மக்கள் எமக்கு ஆதரவும், பங்களிப்பும் வழங்கி விடுதலையை துரிதப்படுத்துவார்கள் என்று உறுதியாக நம்புகின்றோம்.**

1984-01-19

அரசியற்துறைச் செயலர்,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

இத்துண்டறிக்கை தமிழீழ மக்கள் விடுதலைக்கழக அரசியற்துறைச் செயலரினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்